## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, அரியலூர்.

**முன்னிலை: திருமதி. M. மகாலெட்சுமி பி.ஏ.,பி.எல்.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**அரியலூர்.**

2019ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 05 – ம் நாள் வெள்ளிக்கிழமை
ஸ்ரீவிளம்பி வருடம் பங்குனி மாதம் 22 ஆம் நாள்

**குடும்ப வன்முறை சட்டம் குற்றவியல் பல்வகை மனு எண்:01/2016**

வேம்பு 32/16,
க/பெ. கருப்பையா,
மேலவண்ணம் கிராமம்,
அரியலூர் மாவட்டம். ....... மனுதாரர்

//இடையே//

1. கருப்பையா 39/16,
த/பெ. தங்கராசு,

2. பாக்கியம் 58/16,
க/பெ.தங்கராசு,

3. தங்கராசு 65/16,
த/பெ.வேலாயுதம்,

4. பவுனரசு 37/16,
த/பெ.தங்கராசு,

5. செல்வராணி 38/16,
க/பெ.நல்லமுத்து,

6. சேகர் 48/16,
த/பெ.கணேசன்

7. இந்திராணி 42/16,
க/பெ.சேகர்
அனைவரும்,
கரைவெட்டிபரதூர் கிராமம்,
அரியலூர் மாவட்டம். ......... எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 22.09.2016 ஆம் தேதி அன்று குடும்ப வன்முறைசட்டம் பிரிவு.12 – ன் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு இந்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்:01/2016 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து, 01.04.2019 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மேற்படி மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.எம்.சிவக்குமார் **B.A.,B.L.,**

அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் திரு.ஏ.செல்வராஜ் **M.A.,B.L.,** அவர்கள் ஆஜராகியும், குடும்ப வன்முறை சட்டத்தின் கீழான மனுவையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>உத்தரவு</u>

1. மனுதாரர் 1 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாதுகாப்பு கட்டளையும், 1ம் எதிர்மனுதாராரிடமிருந்து குடியிருப்பு கட்டளையும், நஷ்ட ஈடு கட்டளையும், ஜீவனாம்ச கட்டளையும் கேட்டு பாதுகாப்பு அலுவலர் அவர்கள் மூலமாக இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

<u>2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:—</u>

மனுதாரர் மேலவண்ணம் கிராமத்தில் வசித்துவருகிறார் என்றும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்றும், 2,3 எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் மாமியார் மற்றும் மாமனார் என்றும், 4,5,7 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரரின் சகோதர, சகோதரிகள் என்றும், 6ம் எதிர்மனுதாரர் 7ம் மனுதாரரின் கணவர் என்றும் அனைவரும் மேலவண்ணம் கிராமதில் வசித்துவருகிறார்கள் என்றும், மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் இந்து முறைப்படி 31.08.2005 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாற்றில் இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர்கள் வீட்டு உபயோகபொருட்கள் மற்றும் 10 பவுன் நகைகள் மற்றும் ரொக்கம் ரூ.1,00,000/—ம் செய்து கொடுத்தார் என்றும், அந்த 10 பவுனில் 2 பவுன் 1ம் எதிர்மனுதாரருக்கு போடப்பட்டது என்றும், திருமணத்திற்கு பிறகு, மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் 1ம் எதிர் மனுதாரரின் பெற்றோர்கள் வீட்டில் கரைவெட்டி கிராமத்தில் அவர்களது திருமண வாழ்க்கையை தொடங்கினார்கள் என்றும், திருமணமான நாள் அன்று முதல் நாள் இரவே மனுதாரருடன் 1ம் எதிர்மனுதாரர் தாம்பத்தியத்தில் ஈடுப்படாமல் இருந்து வந்தார் என்றும், மனுதாரர் அவருக்கு ஏதோ உடல் நிலை சரியில்லை என்று விட்டுவிட்டார் என்றும், ஆனால் தினம் தினம் இதே போல் தான் 1ம்

எதிர்மனுதாரர் நடந்து வந்தார் என்றும், மனுதாரருடனான தாம்பத்திய வாழ்க்கையை தவிர்த்து வந்தார் என்றும், ஆறு மாதம் காலம் கழித்து மனுதாரர் தனது கணவரிடம் ஏதாவது உடம்பில் பிரச்சினையுள்ளதா என்று கேட்ட போது அவர் தகுந்த பதில் அளிக்கவில்லை என்றும், அதற்கு மாறாக அவர் மனுதாரரை திட்டினார் என்றும், மனுதாரர் அதனை பொருத்துக்கொண்டு வாழ்ந்து வந்தார் என்றும், அதன்பிறகு, இந்த விஷயத்தை மனுதாரர் பெற்றோர்களிடம் சொன்னார் என்றும், மனுதாரரின் பெற்றோர்கள் 1ம் எதிர்மனுதாரரிடம் கேட்டபோதும் தகுந்த பதிலளிக்கவில்லை என்றும், அதற்கு மாறாக மனுதாரர் மீது அவருக்கு உடலில் ஏதோ குறையுள்ளது என்று சொல்லி வந்தார் என்றும், அதன்பிறகு, 1முதல்7 எதிர்மனுதாரர்கள் சேர்ந்துக்கொண்டு மனுதாரரை மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் துன்புறுத்த ஆரம்பித்தார்கள் என்றும், அவர்கள் மனுதாரரை அடிக்கும் அளவிற்கு சென்றுவிட்டார்கள் என்றம், அவர்கள் மனுதாரரை வெளியில் விஷயத்தை சொல்லக்கூடாது என்று துன்புறுத்தினார்கள் என்றும், அப்படி சொன்னால் மனுதாரரை வெளியே துரத்தி விடுவதாக மிரட்டி வந்ததாகவும், அதனால் நீண்ட காலமாக மனுதாரர் அமைதியாக இருந்தும் மனுதாரரை அவர்கள் வெளியே துரத்தினார்கள் என்றும், கிராமத்தில் உள்ளவர்களை வைத்து பஞ்சாயத்து பேசி அதன்பிறகு எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றார் என்றும், மனுதாரரின் வேண்டுகோளுக்கு இணங்க 1ம் எதிர்மனுதாரர் தனியாக வீடு பார்த்து ஜாதகக்காரரின் ஒருவரின் அறிவுரைக்கேற்ப சில நாட்கள் இருந்தார்கள் என்றும், அந்த சமயத்தில் மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரரின் வீட்டு செல்லவிற்கு அனைத்து வசதிகளும் செய்தார்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரர் அந்த சமயத்தில் வீட்டு செலவிற்கு எதுவும் கொடுக்கவில்லை என்றும், பல நாட்கள் அவரும் மனுதாரருடன் வாழாமல் 1ம் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்கள் வீட்டிலே இருந்து வந்தார் என்றும், அப்போதெல்லாம் மனுதாரர் தனியாக இருப்பார் என்றும், மனுதாரர் கூலி வேலைக்கு சென்று சம்பாத்தியம் செய்து வந்தார் என்றும், தனிகுடித்தனமாக இருந்தபோதும் 1ம் எதிர்மனுதாரர் தாம்பத்திய வாழ்க்கையில்

ஈடுப்படவில்லை என்றும், அதனால் மனுதாரர் எதிர்மனுதாரரை மருத்துவர் ஒருவரிடம் கலந்துபேசி என்ன குறை என்று கேட்க அறிவுறித்தினார் என்றும், அதனால் இருவரும் அரியலூரில் உள்ள ஏ.கே.எம். மருத்துவமனைக்கு சென்று மருத்துவர் காஞ்சனா அவர்களிடம் குறையை கேட்டபோது மருத்துவர் பரிசோதனை செய்த போது 1ம் எதிர்மனுதாரருக்கு குறை உள்ளது என்றும், மனுதாரருக்கு எந்த குறையும் இல்லை என்பது தெரியவந்தது என்றும், அதன் அடிப்படையில் இருங்கலூர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்த போது அதேயே ஊர்ஜிதம் செய்தார்கள் என்றும், அதற்கிடையில் மனுதாரர் வாழ்ந்த வீட்டின் உரிமையாளர், வீட்டை காலி செய்ய சொன்னார் என்றும், அதன் படி மனுதாரரே எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் அழைத்து போக சொல்லி சொன்ன போது, 1ம் அழைத்து செல்ல மறுத்து அடித்து மிரட்டினார் என்றும், அங்கிருந்து 1ம் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்கள் வீட்டிற்கு உடனடியாக சென்றுவிட்டார் என்றும், அவர் பின்னாலேயே மனுதாரரும் சென்றார் என்றும், அப்போது எதிர்மனுதாரர்கள் ஏழு பேரும் சேர்ந்து கொண்டு வீட்டிற்குள் நுழையவிடவில்லை என்றும், வெளியே தள்ளி மனுதாரரின் மீது மண்ணென்னை ஊற்றி கொளுத்திவிடுவதாக மிரட்டினார்கள் என்றும், தனது உயிருக்கு பயந்து மனுதாரர் அந்த வீட்டை விட்டு வந்து அரியலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார் என்றும், 20.08.2016 அன்று அரியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரரை அழைத்து போலிசார் கேட்ட போது மனுதாரரை அழைத்து செல்வதாக கூறி அந்த மனு முடிக்கப்பட்டது என்றும், ஆனால், இதுநாள் வரையில் மனுதாரர் அவரது பெற்றோர்கள் வீட்டில் தான் வாழ்ந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர்கள் அனைவரும் மனுதாரரை வீட்டிற்கு வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு அவருடைய கிராமத்தில் நஞ்சை நிலங்கள் உள்ளது என்றும், அதில் அவர் சம்பாத்தியம் செய்து வருகிறார் என்றும், மனுதாரருக்கு குடும்பம் நடத்துவதற்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும், எதிர்மனுதாரருக்கு குறை உள்ளது என்று தெரிந்தும் மனுதாரர் அவருடன் சேர்ந்து வாழ தயாரக உள்ளார்

என்றும், தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுப்பட முடியாது என்று தெரிந்தே மனுதாரரை ஏமாற்றி 1ம் எதிர்மனுதாரர் திருமணம் செய்து கொண்டு உள்ளார் என்றும், அதற்கு 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் உடந்தை என்றும் மனுதாரருக்கு சொத்தோ நிரந்தர வைப்பீடோ இல்லை என்றும், மனுதாரருக்கு எவ்வித வாழ்வாதாரம் கிடையாது என்றும், அவரிடம் சுயமரியாதை, நம்பிக்கை, பணம் ஆகியவற்றை எதிர்மனுதாரர் எடுத்துகொண்டு மனரீதியாக உளச்சலை ஏற்படுத்துகிறார் என்றும், தன்னை பார்த்துக்கொள்ளவே அவர் மனுதாரரின் பெற்றோர்களின் உதவியை சார்ந்து வருகிறார் என்றும், அடிப்படை தேவைகளுக்கே கஷ்ட ஜீவனம் செய்ய வேண்டியுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரரால் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும், தகுந்த வாழ்வாதாரம் இருந்தும் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வாழ்க்கை தர மறுத்து பராமரிக்க தவறிவிட்டார் என்றும், எனவே, 1முதல்7 எதிர்மனுதாரர்களிடமிருந்தும் மனுதாரருக்கு பாதுகாப்பு அளிக்கும்படியும், அவர்களால் உடல் மற்றும் மனரீதியாக மனுதாரருக்கு செய்த கொடுமைகளுக்கு நஷ்டஈடாக ரூ.5,00,000/- பணமும், 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/- ஜீவனாம்சமாக பெற்றுத்தரும்படியும், மேலும் மனுதாரர் வசிக்க குடியிருப்புகட்டளையும் பெற்றுத்தர வேண்டியும் மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை.

மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக மனுதாரர் வேம்புயும், சாட்சி -2 ஆக மனுதாரரின் சித்தப்பா கருப்பையாவும், சாட்சி-3 ஆக சக்கரவர்த்தித அவரையும் விசாரணை செய்யப்பட்டு, 1முதல்6 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டு உள்ளது.

4. <u>மனுதாரர் தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-</u>

ம.சா.1 வேம்பு தன்னுடைய சாட்சியத்தில் அவருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் இந்து முறைப்படி 31.08.2005 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாற்றில் இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர்கள் வீட்டு

உபயோகபொருட்கள் மற்றும் 10 பவுன் நகைகள் மற்றும் ரொக்கம் ரூ.1,00,000/–ம் செய்து கொடுத்தார் என்றும், அந்த 10 பவுனில் 2 பவுன் 1ம் எதிர்மனுதாரருக்கு போடப்பட்டது என்றும், திருமணத்திற்கு பிறகு, மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் வீட்டில் கரைவெட்டி கிராமத்தில் அவர்களது திருமண வாழ்க்கையை தொடங்கினார்கள் என்றும், திருமணமான நாள் அன்று முதல் நாள் இரவே மனுதாரருடன் 1ம் எதிர்மனுதாரர் தாம்பத்தியத்தில் ஈடுப்படாமல் இருந்து வந்தார் என்றும், மனுதாரர் அவருக்கு ஏதோ உடல் நிலை சரியில்லை என்று விட்டுவிட்டார் என்றும், ஆனால் தினம் தினம் இதே போல் தான் 1ம் எதிர்மனுதாரர் நடந்து வந்தார் என்றும், மனுதாரருடனான தாம்பத்திய வாழ்க்கையை தவிர்த்து வந்தார் என்றும், ஆறு மாதம் காலம் கழித்து மனுதாரர் தனது கணவரிடம் ஏதாவது உடம்பில் பிரச்சினையுள்ளதா என்று கேட்ட போது அவர் தகுந்த பதில் அளிக்கவில்லை என்றும், அதற்கு மாறாக அவர் மனுதாரரை திட்டினார் என்றும், மனுதாரர் அதனை பொருத்துக்கொண்டு வாழ்ந்து வந்தார் என்றும், அதன்பிறகு, இந்த விஷயத்தை மனுதாரர் பெற்றோர்களிடம் சொன்னார் என்றும், மனுதாரரின் பெற்றோர்கள் 1ம் எதிர்மனுதாரரிடம் கேட்டபோதும் தகுந்த பதிலளிக்கவில்லை என்றும், அதற்கு மாறாக மனுதாரர் மீது அவருக்கு உடலில் ஏதோ குறையுள்ளது என்று சொல்லி வந்தார் என்றும், அதன்பிறகு, 1முதல்7 எதிர்மனுதாரர்கள் சேர்ந்துக்கொண்டு மனுதாரரை மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் துன்புறுத்த ஆரம்பித்தார்கள் என்றும், அவர்கள் மனுதாரரை அடிக்கும் அளவிற்கு சென்றுவிட்டார்கள் என்றும், அவர்கள் மனுதாரரை வெளியில் விஷயத்தை சொல்லக்கூடாது என்று துன்புறுத்தினார்கள் என்றும், அப்படி சொன்னால் மனுதாரரை வெளியே துரத்தி விடுவதாக மிரட்டி வந்ததாகவும், அதனால் நீண்ட காலமாக மனுதாரர் அமைதியாக இருந்தும் மனுதாரரை அவர்கள் வெளியே துரத்தினார்கள் என்றும், கிராமத்தில் உள்ளவர்களை வைத்து பஞ்சாயத்து பேசி அதன்பிறகு எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றார் என்றும், மனுதாரரின் வேண்டுகோளுக்கு இணங்க 1ம் எதிர்மனுதாரர் தனியாக வீடு பார்த்து

ஜாதகக்காரரின் ஒருவரின் அறிவுரைக்கேற்ப சில நாட்கள் இருந்தார்கள் என்றும், அந்த சமயத்தில் மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரரின் வீட்டு செல்லவிற்கு அனைத்து வசதிகளும் செய்தார்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரர் அந்த சமயத்தில் வீட்டு செலவிற்கு எதுவும் கொடுக்கவில்லை என்றும், பல நாட்கள் அவரும் மனுதாரருடன் வாழாமல் 1ம் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்கள் வீட்டிலே இருந்து வந்தார் என்றும், அப்போதெல்லாம் மனுதாரர் தனியாக இருப்பார் என்றும், மனுதாரர் கூலி வேலைக்கு சென்று சம்பாத்தியம் செய்து வந்தார் என்றும், தனிகுடித்தனமாக இருந்தபோதும் 1ம் எதிர்மனுதாரர் தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுப்படவில்லை என்றும், அதனால் மனுதாரர் எதிர்மனுதாரரை மருத்துவர் ஒருவரிடம் கலந்துபேசி என்ன குறை என்று கேட்க அறிவுறித்தினார் என்றும், அதனால் இருவரும் அரியலூரில் உள்ள ஏ.கே.எம். மருத்துவமனைக்கு சென்று மருத்துவர் காஞ்சனா அவர்களிடம் குறையை கேட்டபோது மருத்துவர் பரிசோதனை செய்த போது 1ம் எதிர்மனுதாரருக்கு குறை உள்ளது என்றும், மனுதாரருக்கு எந்த குறையும் இல்லை என்பது தெரியவந்தது என்றும், அதன் அடிப்படையில் இருங்கலூர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்த போது அதேயே ஊர்ஜிதம் செய்தார்கள் என்றும், அதற்கிடையில் மனுதாரர் வாழ்ந்த வீட்டின் உரிமையாளர், வீட்டை காலி செய்ய சொன்னார் என்றும், அதன் படி மனுதாரரே எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் அழைத்து போக சொல்லி சொன்ன போது, 1ம் அழைத்து செல்ல மறுத்து அடித்து மிரட்டினார் என்றும், அங்கிருந்து 1ம் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்கள் வீட்டிற்கு உடனடியாக சென்றுவிட்டார் என்றும், அவர் பின்னாலேயே மனுதாரரும் சென்றார் என்றும், அப்போது எதிர்மனுதாரர்கள் ஏழு பேரும் சேர்ந்து கொண்டு வீட்டிற்குள் நுழையவிடவில்லை என்றும், வெளியே தள்ளி மனுதாரரின் மீது மண்ணெண்னை ஊற்றி கொளுத்திவிடுவதாக மிரட்டினார்கள் என்றும், தனது உயிருக்கு பயந்து மனுதாரர் அந்த வீட்டை விட்டு வந்து அரியலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார் என்றும், 20.08.2016 அன்று அரியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரரை அழைத்து

போலிசார் கேட்ட போது மனுதாரரை அழைத்து செல்வதாக கூறி அந்த மனு முடிக்கப்பட்டது என்றும், ஆனால், இதுநாள் வரையில் மனுதாரர் அவரது பெற்றோர்கள் வீட்டில் தான் வாழ்ந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர்கள் அனைவரும் மனுதாரரை வீட்டிற்கு வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு அவருடைய கிராமத்தில் நஞ்சை நிலங்கள் உள்ளது என்றும், அதில் அவர் சம்பாத்தியம் செய்து வருகிறார் என்றும், மனுதாரருக்கு குடும்பம் நடத்துவதற்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும், எதிர்மனுதாரருக்கு குறை உள்ளது என்று தெரிந்தும் மனுதாரர் அவருடன் சேர்ந்து வாழ தயாரக உள்ளார் என்றும், தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுப்பட முடியாது என்று தெரிந்தே மனுதாரரை ஏமாற்றி 1ம் எதிர்மனுதாரர் திருமணம் செய்து கொண்டு உள்ளார் என்றும், அதற்கு 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் உடந்தை என்றும் மனுதாரருக்கு சொத்தோ நிரந்தர வைப்பீடோ இல்லை என்றும், மனுதாரருக்கு எவ்வித வாழ்வாதாரம் கிடையாது என்றும், அவரிடம் சுயமரியாதை, நம்பிக்கை, பணம் ஆகியவற்றை எதிர்மனுதாரர் எடுத்துகொண்டு மனரீதியாக உளச்சலை ஏற்படுத்துகிறார் என்றும், தன்னை பார்த்துக்கொள்ளவே அவர் மனுதாரரின் பெற்றோர்களின் உதவியை சார்ந்து வருகிறார் என்றும், அடிப்படை தேவைகளுக்கே கஷ்ட ஜீவனம் செய்ய வேண்டியுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரரால் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும், தகுந்த வாழ்வாதாரம் இருந்தும் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வாழ்க்கை தர மறுத்து பராமரிக்க தவறிவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5. ம.சா.2 கருப்பையா அவருடைய சாட்சியத்தில் மனுதாரர் கரைவெட்டிபரதூரில் கீழத்தெருவில் வாடகைக்கு வீடு எடுத்து குடியிருந்து வந்தார் என்றும், தான் மேலத்தெருவில் வசித்து வருவதாகவும், ஒரு வருடத்திற்கு முன்னால் காலை 06.30 மணிக்கு மனுதாரரின் வீட்டின் வழியாக வயலுக்கு சென்றபோது மனுதாரரின் வீட்டில் கூட்டமாக இருந்தது என்றும், ம.சா.2 என்னவென்று பார்த்தபோது வேம்பு, வேம்புவின் நாத்தனார் செல்வராணி,

இந்திராணி, தங்கராசு, பாக்கியம், சேகர், கருப்பையா ஆகியோர்கள் மனுதாரரை அடித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், ம.சா.2 விலக்கி பார்த்தும் அவர்கள் விலகவில்லை என்றும், 7 பேரும் மனுதாரரை வீட்டிற்குள் நுழைந்தால் மண்ணென்ணெய் ஊற்றி கொழுத்திவிடுவேன் என்று சொன்னார்கள் என்றும், செல்வராணி மனுதாரர் வேம்புவின் மேல் மண்ணெண்ணெயை ஊற்றிவிட்டார் என்றும், உடனே ம.சா.2ம் அவருடைய சின்ன மாமனார் சக்கரவர்த்தியும் மனுதாரரை அழைத்து கொண்டு அரியலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக சாட்சியமளித்துள்ளார்.

6. ம.சா.3 சக்கரவர்த்தி அவருடைய சாட்சியத்தில் மனுதாரரை 1வது எதிர்மனுதாரருக்கு 12 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொடுத்தார் என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் அடிக்கடி சின்ன சின்ன பிரச்சினை நடந்தது என்றும், ம.சா.3 சமாதானபடுத்தி அனுப்பி வைத்துள்ளார் என்றும், மனுதாரரும் 1வது எதிர்மனுதாரரும் கரைவெட்டிபரதூரில் வாடகை வீட்டில் குடியிருந்தார்கள் என்றும், வாடகைக்கு வைத்தவர்கள் நாட்கள் முடிந்துவிட்டதால் வீட்டை காலி செய்ய சொன்னார்கள் என்றும், மனுதாரர் சொந்த வீட்டிற்கு செல்வோம் என்று போனபோது மனுதாரருக்கும், தங்கராசு, பாக்கியம், கருப்பையா, பவுன்ராசு, செல்வராணி, இந்திராணி, சேகர் ஆகியோர்களுக்கும் தகராறு நடந்து கொண்டிருந்தது என்றும், மனுதாரரை வீட்டிற்குள் வரகூடாது என்று தள்ளினார்கள் என்றும், ஒருவருடத்திற்கு முன்னால் தனது மாமாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று பார்க்க சென்றபோது மனுதாரரின் வீட்டில் கூட்டமாக இருந்தது என்றும், தான் சென்று பார்த்தபோது தனது மாமா மனுதாரரை அழைத்து கொண்டு வந்தார் என்றும், மனுதாரர் மேல் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு இருந்தது என்றும், தான் கேட்டபோது எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு குழந்தை இல்லை அதனால் வீட்டிற்குள் நுழையக்கூடாது என்று சொல்லி கொண்டிருந்தார்கள் என்றும், தான் அவர்களிடம் தனது அத்தை மகளான மனுதாரருக்கு எந்த குறையும் இல்லையே என்று சொல்லி ம.சா.3ம் அவரது மாமாவும் மனுதாரரை அழைத்து கொண்டு மருத்துவமனைக்கு

வந்துவிட்டார் என்றும், மனுதாராரின் மேல் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு சீலை இல்லாமல் பாவாடை மற்றும் ஜாக்கெட்டுடன் இருந்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. பிரச்சினைக்குரிய தீர்வு :—

தற்போது எழும் வினா இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்?

## 9.தீர்வு: —

பாதுகாப்பு கட்டளை மற்றும் குடியிருப்பு கட்டளைகளை குறித்தும் பரிசீலனை செய்யும்போது: —

மனுதாரர் 1முதல்7 எதிர்மனுதாரர்களின் துன்புறுத்தலுக்கு ஆளானார் என்பதும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிலிருந்தும் சாட்சியத்திலிருந்தும் தெரிகிறது. அதனை ஆட்சேபிக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் குறுக்குவிசாரணையின் போது வீட்டு சாமான்களை மனுதாரரிடம் கொடுத்துவிட்டார் என்ற வினாவிற்கு இன்னும் சில சாமான்களை கொடுக்கவில்லை என்றும், ஒன்பது வருடம் காலம் எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து வாழ்ந்தாகவும், அதன் பிறகு மூன்று வருடகாலம் தனது கணவரான 1ம் எதிர்மனுதாரருடன் கமலா என்பவர் வீட்டில் வாடகைக்கு இருந்ததாகவும், அதற்கு வாடகையே தனது நகையை அடகு வைத்து கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், தாங்கள் தனியாக இருந்த காலகட்டத்தில் சாப்பாட்டிற்கு மனுதாரர் களைவெட்டிதான் சாப்பிட்டார் என்றும், தான் சமைத்து வைத்ததை 1ம் எதிர்மனுதாரர் சாப்பிடுவதுமில்லை, மனுதாரர் தன்னுடைய சாப்பாட்டிற்கு உதவி செய்யவுமில்லை என்றும், கடந்த ஒருவருடமாக மனுதாரர் தனது பாட்டி வீட்டில் இருப்பதாகவும், தனது கணவர் தன்னை பராமரிக்கவில்லை என்றும், மனுதாரர் தன்னுடன் வாழாததுதான் தனக்கு நஷ்டம் என்றும், மனுதாரர் தனது அம்மா வீட்டிற்கு சென்றால் தவறாக பேசுகிறார் என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணையின் போது சாட்சியமளித்துள்ளார்.

இவ்வாறு சாட்சியமளித்துள்ளதை மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள ம.சா.2 கருப்பையா, ம.சா.3 சக்கரவர்த்தி ஆகியோர்களின் சாட்சியங்கள் மூலம் உறுதி செய்துள்ளனர். மேலும், மனுதாரர் மீது மண்ணெண்ணையை ஊற்றி கொளுத்த முயற்சி செய்தார்கள் என்ற மனுதாரரின் கூற்றை ம.சா.2, ம.சா.3 ஆகியோர்களும் உறுதிப்படுத்தி சாட்சியமளித்துள்ளார்கள். ம.சா.3 சக்கரவர்த்தி அவரது விசாரணையின் போது மனுதாரர் வாடகை வீட்டில் குடியிருக்கும் நாட்கள் முடிந்துவிட்டதால் வீட்டை காலி செய்ய சொன்னார்கள் என்றும், மனுதாரர் அங்கிருந்து எதிர்மனுதாரர்கள் வீட்டிற்கு சென்றபோது வீட்டிற்குள் வரக்கூடாது என்று தள்ளினார்கள் என்றும், ஒருவருடத்திற்கு முன்பு தனது மாமாவிற்கு உடல் நிலை சரியில்லை என்று பார்க்க சென்றபோது மனுதாரர் வீட்டில் கூட்டமாக இருந்தது என்றும், மனுதாரரின் மேல் மண்ணெண்ணை ஊற்றப்பட்டிருந்தது என்றும், சாட்சியமளித்துள்ளார். மேலும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு குழந்தை இல்லை என்று சொல்லி வீட்டிற்குள் நுழையக்கூடாது என்று சொல்லிவிட்டதாகவும், சாட்சியமளித்துள்ளார். இவ்வாறு அவர் சாட்சியமளித்துள்ளது மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள் அவரை துன்புறுத்தினார்கள் என்று கூறும் கூற்றை உறுதி செய்யும் விதமாக உள்ளது. ஒரு கணவரானவர் தனது மனைவியை காக்க வேண்டும் என்பது நம் நாட்டின் பன்பாடாகும். மனுதாரரின் நடத்தையில் சந்தேகிப்பதாக எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரை குறுக்குவிசாரணை செய்யும் போது சில கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. அதனை வைத்து பார்க்கும் போது எதிர்மனுதாரரின் உண்மையான எண்ணம் வெளிப்படையாக தெரிகிறது. சந்தேகத்தின் பேரில் தனது மனைவியை 1ம் எதிர்மனுதாரர் பராமரிக்கதவறிவிட்டதும், சேர்ந்து வாழாமல் இருப்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெளிவுப்பட தெரிகிறது. ஒரு மனைவியை கணவர் பாதுகாத்து உணவு, இருப்பிடம் வழங்கவில்லை என்றால் அது அந்த பெண்ணுக்கு செய்யும் அநிதியாகும். எனவே, மனுதாரர் எதிர்மனுதாரரின் மனைவி என்பதில் எந்த ஐய்யப்பாடும் இல்லை. மேலும், மனுதாரருக்கு, 1ம் எதிர்மனுதாரருக்கு திருமணமாகி உள்ளது என்பதை எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கவில்லை. எதிர்மனுதாரர்

வீட்டில் 1ம் எதிர்மனுதாரரின் மனைவி என்ற முறையில் வசிக்க அனுமதியளித்தும், அப்படி இல்லை என்றால் எதிர்மனுதாரர் வீடுபார்த்து மனுதாரரை குடி அமர்த்தி அதற்கு உண்டான வாடகையை கொடுக்கவேண்டும் என்றும், இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. மேலும், மனுதாரரை பராமரித்து பாதுகாப்பு அளிக்கவும், மனுதாரருக்கு எவ்வித இடையூரும் எதிர்மனுதாரர்கள் யாரும் கொடுக்கக்கூடாது என்றும் உத்தரவிடப்படுகிறது.

10. நஷ்டஈடு கட்டளைக்குறித்து பரிசீலனை செய்யும் போது:—

மனுதாரருக்கு ஏற்பட்ட பண செலவிற்கும், மன உளச்சலுக்கும், ஐந்து லட்சம் நஷ்ட ஈடு, பரிகாரமும் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரை திருமணம் செய்து அவருடன் சேர்ந்து வாழாமல் அவரை விரட்டி அடித்தும், 2முதல்7 எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்துக் கொண்டு மனுதாரரை அடித்து துன்புறுத்தியும், மிரட்டல் விடுத்தும், கொடுமைப்படுத்தி வருவதாகவும், தான் மன உளச்சலுடன் இருப்பதாகவும், மனுவிலும், சாட்சியத்திலும் கூறியிருக்கும் நிலையிலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணையில் மட்டும் மறுத்திருந்தாலும் அவர் தரப்பு சாட்சியங்கள் மூலமாகவோ, ஆவணங்கள் மூலமாகவோ எந்த ஒரு சாட்சியமும் அளித்து மனுவை மறுத்துரைக்கவில்லை. மனுதாரருக்கு ஏற்பட்ட இழைப்பிற்காகவும், மன உளச்சலுக்காகவும், ஈடு செய்ய முடியாது என்று உள்ள போதும் அவருக்கு நஷ்ட ஈடாக வழங்க வேண்டியது ஏதோ ஒரு வகையில் ஆறுதலாக இருக்கும் என்று கருதி மனுதாரர் கோரி இருக்கும் இப்பரிகாரத்தை வழங்க தீர்மானித்து ரூ.3,00,000/—ம் நஷ்ட ஈடு வழங்கி உத்தரவிடப்படுகிறது.

11. ஜீவனாம்ச கட்டளைக்குறித்து பரிசீலனை செய்யும் போது :—

மனுதாரர் அவருடைய சாட்சியத்தில் மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றதாக கூறியுள்ளார். அதற்கு ஆதாரமாக ம.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். அதனை பரிசீலனை செய்யும்போது இருவருக்கும் நடந்த திருமணத்தை ஊர்ஜிதம் செய்கிறது. மேலும், மனைவியை காக்க வேண்டிய கடமை

சட்டப்படியும் தார்மீக அடிப்படையிலும் 1ம் எதிர்மனுதாரருக்கு உள்ளது. எனவே மனுதாரரை காக்கவேண்டிய கடமை 1ம் எதிர்மனுதாரருக்கு உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இன்றைய பொருளாதார சூழ்நிலையும் வாழ்கை தேவைகளையும் கவனத்தில் கொண்டு மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ.5000/—கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்ட தேதி முதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இந்த தேதி வரை பாக்கி உள்ள தொகைகளை 1ம் எதிர்மனுதாரர் 5 மாத காலத்திற்குள் மனுதாரரிடம் செலுத்தி ரசீது பெறவேண்டும் என்றும், மனு உத்தரவு பெற்ற தேதிக்கு பின்னிட்டு ஒவ்வொரு மாதமும் பிரதி ஆங்கில மாதம் 5ம் தேதிக்குள் மனுதாரர் ஜீவனாம்ச தொகையினை மனுதாரரிடம் 1ம் எதிர்மனுதாரர் செலுத்தி அதற்கு ரசீது பெற வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

எனவே முடிவாக மனுதாரருக்கு 1முதல்7 எதிர்மனுதாரர்களிடம் பாதுகாப்பு கட்டளையும் மற்றும் குடியிருப்பு கட்டளையும், மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ.5000/—ம் ஜீவனாம்சமும் செலுத்த கடமைப்பட்டவர் என்றும், மேலும் மனுதாரருக்கு நஷ்ட ஈடுகட்டளையாக ரூ.3,00,000/— 1ம் எதிர்மனுதாரர் கொடுக்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2019ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 05 ஆம் தேதி இந்த அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்)திருமதி.எம்.மகாலெட்சுமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.
அரியலூர்.

<u>அனுபந்தம்</u>

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>

1. ம.த.சா.1 — வேம்பு
2. ம.த.சா.2 — கருப்பையா
3. ம.த.சா.3 — சக்கரவர்த்தி

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்: –</u>

1. ம.சா.ஆ.1 – திருமண பத்திரிக்கை
2. ம.சா.ஆ.2 – 31.12.2014ம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனு ரசீது.
3. ம.சா.ஆ.3 - 20.08.2016ம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனு ரசீது.
4. ம.சா.ஆ.4 - மருத்துவ சான்று
5. ம.சா.ஆ.5 - 1ம் எதிர்மனுதாரருக்கு சென்னை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ அறிக்கையுடன் கூடிய ரசீது.
6. ம.சா.ஆ.6 - மனுதாரரின் காயச்சான்றிதழ்

## <u>குறிப்பு: –</u>

மனுதாரருக்கு உத்தரவின் நகல் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஒம்)திருமதி.எம்.மகாலெட்சுமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.
அரியலூர்.

// உண்மை நகல் //